**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE'S, HOSUR.**

SC. 32/2023 தேதி 05.06.2025

அ.சா. 5 – ஹரிஷ்குமார்

**அ.சா. 5 திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. வாக்குமூலத்தை யார் எழுதினாகள் என்றால் போலிசார் லேப்டாப்பில் வாக்குமூலத்தை டைப் செய்தார்கள் என்கிறார். எங்கு வைத்து டைப் செய்தார்கள் என்றால் அன்னையப்பா வீட்டின் அருகில் என்கிறார். வெங்கடலட்சுமி வாக்குமூலம் தரவில்லை என்றால் சரிதான். வாக்குமூலத்தில் கட்டையை எடுத்து கொடுத்ததாக அன்னையப்பாவோ , சுரேஷோ சொல்லவில்லை என்றால் என் முன்னிலையில் தான் எடுத்து கொடுத்தார்கள் என்கிறார். வாக்குமூலத்தில் அந்த விவரத்தை சொல்லியுள்ளார்களா என்று தெரியவில்லை என்கிறார். அன்னையப்பா வீட்டிற்கும் சம்பவ இடத்திற்கும் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். உபயோகப்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஆயுதத்தை எங்கு வைத்துள்ளோம் என்று அன்னையப்பாவோ , சுரேஷோ வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் வாக்குமூலத்தில் சொன்னார்களா என்று தெரியவில்லை என்றும் ஆனால் வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தார்கள் என்றும் சாட்சி சொல்கிறார்.

2. கிருஷ்ணமூர்த்தி என்பவர் வாங்கிய இடத்தை பதிவு செய்வதற்கு நான் உடன் செல்லவில்லை என்றால் சரிதான். அவர் கிரயம் வாங்கியுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் . எனக்கு நேரில் தெரியாது. லேப்டாப்பில் டைப் செய்யப்பட்ட வாக்குமூலத்தை பிரிண்ட் எடுக்க என்னை போலிசார் காவல் நிலையம் அழைத்து சென்றார்களா என்றால் ஆமாம் . அங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம் . சம்பவ இடத்திலும் கையெழுத்து வாங்கினார்கள் என்கிறார். சம்பவ இடத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கவில்லை என்றும் நான் பொய் சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வாக்குமூலத்தில் தங்களை அழைத்து சென்றால் எடுத்து தருவதாகவோ , சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் முன்னிலையில் தான் ஆயுதங்களை எடுத்து கொடுத்தார்கள் என்கிறார். என் முன்னிலையில் எதிரிகள்

வாக்குமூலம் கொடுத்ததாகவும் , சான்று பொருட்களை கைப்பற்றியதாகவும் , வாக்குமூலத்திலும் , கைப்பற்றுதல் மகஜரிலும் , கையொப்பம் செய்ததாகவும் , நான் சொல்வது பொய் என்றும் நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்து விட்டு அன்னையப்பா வீட்டருகே கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நிலத்துக்கு அருகில் கையொப்பம் செய்ததாக என்னுடைய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் சம்பவ இடம் வந்ததகாவும் , என் முன்னிலையில் பொருட்களை கைப்பற்றியதாகவும் , ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் , மகஜர் தயார் செய்ததாகவும் சொல்வது பொய் என்றும் , அதனால் தான் நான் மகஜர் இடத்தை மாற்றி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. 3 ம் எதிரியும் , கிருஷ்ணமூர்த்தியும் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். அவர்களுக்கிடையில் நீதிமன்றத்தின் பாகப் பிரிவினை வழக்கு நடப்பது தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்தது 2021 ம் வருடம் என்றால் சரிதான். எனக்கும் அன்னையப்பாவிற்கும் இடையே ஒசூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 71/2020 என்ற வழக்கு நடந்து வருகிறது என்றும் , அதில் நான் தரப்பினர் என்றும், தெரியவில்லை என்கிறார். என் அப்பா அந்த வழக்கை நடத்தலாம் எனக்கு தெரியவில்லை என்கிறார். அந்த வழக்கு பற்றிய விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் , இந்த வழக்கிற்காக அந்த வழக்கு பற்றி தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த வழக்கு எங்களுக்கு சாதகமாக வரவேண்டும் என்பதற்காக , கிருஷ்ணமூர்த்திக்கு ஆதரவாக அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Subordinate Judge,
Hosur